# நெறி நூல்.

551

557

ஆக்கியோர்:
பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்,
தலைவர், தமிழ் இலக்கியக்கழகம், தக்கலை.

செந்தமிழ் நிலையம்,
பதுமநாபபுரம்,
தக்கலை.

பதிப்புரிமை.]. 1946 [விலை அணு 3.

# தமிழின் தற்கால நிலைமை.

---

நம் அருமந்த தண்டமிழின் பண்டைச் சிறப்பும் இன்றை நிலைமையும் வளம்பட இனிய நடையில் எடுத்துரைப்பது இந்நூல். தமிழின் தெய்வத்தன்மையும் பிறவும் பாடல்களுடன் காட்டப்பெற்றுள்ளன. தமிழ்மக்கள் யாவரிடத்தும் இருக்கத்தக்க சிறப்பு உடையது. சொற்பொழிவு நிகழ்த்துவார்க்கு இது சிறந்த அணிகலமாகும். சின்னூலாயினும் மாணவரும் மற்றுள்ளோரும் கற்கத்தக்க அரும்பெரும் பொருள்களைத் தன்னுள் அடக்கி விளங்குவது.

விலை அணா 6.

6 அணாவுக்குத் தபால் தலை அனுப்புவோர்க்குத் தபால்கூலி இல்லாமல் அனுப்பப்படும்.

செந்தமிழ் நிலையம்,
பதுமநாயபுரம், தக்கலை,
தென் இந்தியா.

# நெறி நூல்.

## கடவுள் வணக்கம்.

வெண்பா.

அறிநூ லனைத்து மறிந்துணர்ந்தோர் போற்ற
நெறிநூ லுரைப்பெ னிலத்தில் - செறிநூற்
கலைமகளை முன்னூற் கருத்து வடிவாய்
நிலைமகளை முன்னர் நினைந்து.

## ஆக்கியோன்.

மன்னு மரசைவரு மால்முருக னற்றமிழில்
துன்னு மறங்கள் தொகுத்துரைத்தான் - பன்னுகலை
நண்ணியமெய்ந் நாற்பொருளு நன்கு தெரிந்துணர்ந்த
நுண்ணியவ ரெண்ணுநெறி நூல்.

# நூல்.

## கல்வி.

கல்வியா லென்றுங் கசடி லறிவுண்டாம்
புல்லுந்தீ தென்று புகலற்க - கல்வி
உடையாருந் தீய வொழுக்கத்த ராதல்
இடையாரு முள்ளத் தியல்பு. 1

## கல்விச்சிறப்பு.

கல்விக் கொழுக்கங் கவினாகு மெய்துபுகழ்
புல்லு மொழுக்கத்தின் பொற்பாகும்-சொல்லின்
புகழுக் கழகுமிகு புண்ணியமா மென்பர்
இகழுக் கிடனென் றிலார். 2

## கல்வி—செல்வம்.

கல்வியுஞ் செல்வமு மென்றிரண்டுங் காணுங்கால்
நல்வகைய வாகுமிந் நானிலத்தில் - கல்விதனிச்
செல்வமே யென்பபொருட் செல்வமுந் தீதற்ற
கல்வியால் வீறுபெறுங் காண். 3

## கேள்வி.

கல்விப் பயனைக் கசடற முற்றுவிக்கும்
பல்வகைய மெய்க்கலையின் பண்புணர்த்தும்-
சொல்லனுறின்
ஐய மகற்றி யரும்பொருளைத் தோற்றுவிக்கும்
வையம் புகழ்கேள்வி வாய்ப்பு 4

## சொற்போர்.

ஒருவ ருரைத்ததனை யுற்றுணர்ந்த பின்னர்
வெருவ வருமொழிகள் விள்ளார் - அரிய
பொருளாய்ந் தெதிர்சொல்க புன்னெறியின் வெல்லக்
கருதுவது கல்விக் கறை. 5

பிதற்றி மிகக்காய்ந்து பேசுமவர் தம்மை
எதிர்க்க நினைத லிழிவாம் - பிதற்றுவதேன்
நாய்க்குரைக்கு முன்னெதிர்த்து நாடிக்
குரைப்பனதாம்
பேய்க்குலத்து முண்டோ பிற. 6

நாய்போற் குரைத்து நமன்போல் விழுந்துகைத்துப்
பேய்போற் பிணங்கிமொழி பேசிமிகக் காய்வாரைக்
கற்ருேர் கலவார்கள் தம்மினிவர் கேடரென
மற்ருேரு மெய்தார் மதித்து. 7

## புலவரை இகழாமை.

மன்னவர்கள் தம்மை மதியா விடினுலகில்
அன்னவரா லாந்துயர்க ளாயிரமாம்-மன்னுகலே
கற்ருேர் தமையிகழிற் காலகொண்டெய்க்குலமும்
அற்ருேடி வீந்துவிடு மால். 8

## பெரியோரை இகழாமை.

பொருளுண்டையே மென்று புரையோர் தமையோர்
பொருளிலரா வெண்ணிப் புகலேல்-பொருளுடைய
எல்லா மிமைப்பொழுதி னில்லா திகந்துவிடும்
வல்லார் வருந்த வரின். 9

## மேலோர்.

குப்பைக் கிடந்தாலுங் குன்றிமணி குன்றிமணி
இப்படியி லொன்று மிழுக்கில்லை - தப்பில்லா
மேலோர்க ளெவ்விடத்து மேவி யிருந்தாலும்
மேலோர்கள் மேலோர்க ளே. 10

### நல்லோர்.

நல்லோர்க ளெங்கே பிறந்தாலு நானிலத்தில்
எல்லோரு மேத்தி யிதஞ்செய்வார் -சொல்லோதச்
சேற்றிடையே தோன்றிடினுஞ் செந்தா மரை
மலரைப்
போற்றியிறை வற்கணிவார் போந்து. 11

### சான்ருேர் அறவுரை.

கற்றறிந்த சான்ருேர் கடுமொழிமுன் னேகசந்து
மெற்றைப் பொழுதினும்பின் னின்சுவைத்தாம்-
உற்றகடு
மாமருந்து முற்கசக்கு மேனு மதியுடம்பி
ஞமரிய நோயகற்று மால். 12

### அரசன்.

பூவுலகு தான்செழிப்பப் பூம்புன ஞடனன்று
காவிரியி னீத்தங் கலந்தழிந்தான் - மேவுமுயிர்
அத்தனைக்குந் தாயாகி யாளு பவனன்ருே
அத்தனுல காளு மரசு. 13

### பகைவர்.

நண்ணுதார் தம்மையு நட்புடையார் போற்கொண்டு
கண்ணு விருந்து கடன்புரிக - நண்ணுதார்
என்றுமே தேறத் தகாதா ரியலுமறை
ஒன்று முரையற்க வுற்று. 14

### செல்வப்பயன்.

கற்ருரை யோம்பல் கடுவினையார்ப் பேணலின
மற்ருரைக் காத்த லறம்புரத்தல் - சுற்றம்
முழுதளித்தல் துய்த்தலிசை முன்னடைத லென்ப
பழுதகன்ற செல்வப் பயன். 15

### ஈகை.

கொடுத்துண்பார் தாமே குணமுடையார் மற்றோர்
கெடுத்துண்பார் தத்தங் கிளையை- மடுத்துண்பார்
நண்ணார் புகழவரை நண்ணுதற்கு நல்குரவு
கண்ணாக நிற்குங் கலந்து. 16

### புகழ்.

சாத லெனவொன்று சாற்றுங்கால் யாவர்க்கும்
போத நிகழும் பொதுவழக்கம் - சாதலால்
என்றுமிடர் மெய்ப்புகழை யெய்தினார்க் கில்லையவர்
பொன்றிடினும் பொன்றா தவர். 17

### மறைபேணல்.

ஒருவ ருரைத்தமறை யுள்ளத் தடக்கித்
தெரியாதார் போலத் திரிக - உரியவர்தம்
நுட்பம் பிறர்க்குரைக்கு நுண்ணறிவில் லாருடைய
நட்பு நயத்தக்க தன்று. 18

### இனஞ்சேர்தல்.

கூடாதார் கூட்டத்துக் கூடிக் குலவிவரின்
கூடாதார் கூட்டமே கூடிவிடும் - கூடாதார்
தாமொருவ ரோடு தலைப்படினு ஞாலமெலாம்
சேமநிலை நீங்குமெனச் செப்பு. 19

### வஞ்சக் ஒழுக்கம்.

உள்ளொன்று தேர்ந்து புறத்தொன் றுரைத்துலகைக்
கள்ளம் படுத்தொழுகுங் கள்வர்க்குக்-கள்ளந்தான்
மேற்றும் வருந்த வெளிப்படலா லாழ்துயரும்
ஆற்றா நரகமு மாம். 20

### நல்லோர்—தீயோர்.

கற்பகத்தைச் சேர்ந்தார் கனகமணி சாந்துமுதற்
பற்பலவா மெய்த்திருத்தம் பாலடைவர்—
வெற்புகத்தின்
ஓங்கி வளரொளியை யுற்றா ரடைகுவதென்
பாங்குடைய ரல்லாதார் பண்பு. 21

### வஞ்சகர்.

ஒன்றுரைத் தொன்றுசெய் தொன்றிங்க ணுட்டமுறு
நன்றிலரைக் கூடி னலமென்னும்—நின்றநிலை
நில்லாவப் பேதையரால் நீளுலக மெல்லாம்பல்
பொல்லாங் கிடையழிந்து போம். 22

### குற்றமுடையார்.

குற்றமுடை நெஞ்சங் குறுகுறுக்கு மென்றுலகில்
அற்றமி லாவறிஞ ராய்ந்துரைப்பர்—முற்ற
வழுவுடையார் மாட்டு வழங்குகுறி நோக்கி
வழுவுடைமை தேர்தல் வழக்கு. 23

### கயவர்.

சிறுதுரும் பும்பயனைச் செய்யுமெனச் சொல்வர்
உறுதுரும்புக் குங்கயவ ரொவ்வார்—உறுதியிலா
அன்னவர்மாட் டுச்செல்வ மாகு மணுகரிய
மன்னவிர்பாந் தட்கண் மணி. 24

### பகை—நட்பு

அறிவுடையார் மாட்டே ரரும்பகையே யானும்
பெறுகவது நன்றாகும் பின்னர்—செறிவிலரோர்
பெட்பில்வெந் தீயவர்புன் பேதையரின்
னோர்மாட்டு
நட்பெனினும் வேண்டா நமக்கு. 25

### வஞ்சகநட்பு.

பயின்றொழுகு நட்பிற் படர்வஞ் சனைகள்
குயின்றொழுகு கின்ற கொடியோர்-துயின்றபொழு
தின்னுயிரை வீட்டு மிருங்கால தூதருறு
மன்னுயிரை வாட்டும் வினை. 26

### கடுஞ்சொல்.

கடுஞ்சொன் மொழிந்து கனம்பெறலா மென்றே
அடுஞ்சொன் மொழித லவமாம்-கடுஞ்சொல்லே
பேராண்மை நீக்கிப் பெருந்துயரத் தாட்செலுத்திச்
சீராண்மை செற்றுவிடுந் தேர். 27

### பிறருயர்விற்பொறாமை.

பிறருயர்வு கண்டு பொறாமற் பெரிதும்
வெறிதே துயரமுறல் வேண்டா-அறிவுடையார்
தாமே முயன்று தரும்பெருமை யெய்துவரால்
தாமே தமதுயர்வின் சார்பு. 28

### அடங்காமை.

மொழியொன் றுரைப்புதன் முன்னர்ச் சினந்து
பழிதுன்றப் போர்க்கணுகும் பான்மை-வழிகொன்
றறங்குலம்பண் பாண்மை யழித்துலகி லென்றும்
புறங்கழியச் செய்யும் புரைத்து. 29

### பெற்ற பொருளால் அமைதிபெறல்.

மன்னவரை மானுவரே மற்றோர் தம்துபொருள்
துன்னிடினும் வேண்டாத தூயவர்தாம்—மன்னவரும்
தம்பொருளா லுள்ளந் தணிந்திலரே லன்னவரே
அம்புவியி னல்கூர்ந் தவர். 30

### நிலைதவருமை.

சிறப்பில் பொருளெனினுஞ் சேருமிடஞ் சேரின்
சிறப்பில் மிகுந்து திகழும்—சிறப்பில்
தலைமயிரும் பல்லு முகிருந்தாந் தங்கு
நிலையதனை லெய்து நிலை. 31

### துன்பம்.

துன்பந் தொடுத்துறினுந் துன்புணரார் துன்பத்தும்
இன்பந் திளைக்குமா றெண்ணுவரால்—துன்பமேல்
இன்பம் பெறுவதற் கேதுவா மென்றுணர்ந்து
துன்பந் துணைவேண்டு வார். 32

### மனவமைதி.

பெற்ற பொருளாற் பேரமைதி யார்கநில
முற்றிடினு மாசைக் கொழிபில்லை—முற்றுபொரு
ளில்லா ரெனினு முடையா ரெனப்படுவர்
இல்லாது வேண்டா ரெனின். 33

### விதி—மதி.

விதியார் பயப்ப ரெனமுயற்சி விட்டு
மதியார் தமைமாற்றி வாழின்-விதியார்
வெறுங்கையே காட்டி விடுப்பர் மதியார்
குறுங்கையுங் கைகொடுத்தி டார். 34

### வினை.

செய்த வினைப்பயனைச் செய்தவரே தாய்ந் துய்ப்பர்
உய்வகையில்லையென் றோதுவர்-பொய்யெனவே
விள்ளுவர்சில் லோரெனினும் வெம்மை பிறர்க்கிழைத்துக்
கொள்ளுவதென் னோமோ குணம். 35

### உடல்நிலையாமை.

உடம்பு நிலையா துலகியலிற் கண்டோம்
உடம்பி னுறுபயன்க ளெல்லாம்-உடம்பு
நிலைக்குங்காற் செய்க நெடுங்கூற் றுயிரை
அலைக்குங்கா லென்னு வது. 36

### வாழ்க்கைப்பயன்.

இயலு மறப்பொரு ளின்பம்வீ டென்ப
பயிலும் பிறவிப் பயன்கள்-முயல்வின்
இலங்கு மிவற்றினென் றெய்தாதா ரெல்லாம்
விலங்குநிக ரென்றே விளம்பு. 37

வீடு தனையெய்தும் வேட்கை யகத்தமைத்து
நீடு மறமூன்று நெடிதுய்க்க-கூடு
பிறவி யறுக்குமுயர் பெட்பிலா ரெல்லாம்
இறவி கடவா ரிவண். 38

## காமம், கள், பொய்ம்மை, கடுமை, கொலை, ஊன் இவற்றின் தீமை.

காமங்கள் பொய்ம்மை கடுமைகொலை யூனிவற்றின்
நாமங்கள் போக்கி நலமார்க-தோமொன்றும்
ஒன்றேனு மீங்கிவற்றி னுண்டே லதுவுலகத்
தென்றேனு நன்மைதர லின்று. 39

## இல்லறம்—துறவறம்.

கற்புக் கடம்பூண்ட காரிகையா ளோடுமனம்
அற்புக் கடம்பூண் டமைந்தொழுகிப்-பொற்புடைய
சுற்றந் தழுவித் துணையா மறமோம்பி
அற்றந் தவத்தை யடை. 40

முற்றும்.

தாஸர் பிறஸ், நாகர்கோவில்.—1946.

# செந்தமிழ் நிலைய வெளியீடுகள்.

பண்டித இராமசுப்ரமண்ய நாவலர் செய்தவை.

**தமிழின் தற்கால நிலைமை.** *நம் அருமைத் தமிழ்த்தாயின் பண்டைய நலங்களையும் இன்றைய நிலைகளையும் மேற்கோள் வாயிலாக விளக்கும் ஓர் சுருக்க நூல்.* விலை அணா 6

**முத்தமிழ் வாணர்.** *கபில பரண நக்கீரர்களாகிய சங்கச் சான்றோர்களது வரலாறுகளை மேற்கோள்களுடன் உயரிய நடையில் கூறுவது. தனித்தமிழ் விருப்பம் உடையவர்களுக்கு இது மிக்க பயன் தரும்.* விலை அணா 8

**அணி நலன்.** *தமிழ்ப்பாடல்களில் உள்ள அலங்காரங்களின் சுவைச் சிறப்பைக் கூறும் ஆராய்ச்சிக் கட்டுரை.* விலை அணா 2

**நரிவிருத்த ஆராய்ச்சி.** *சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் பெருமான் செய்த நரிவிருத்தச் சிறப்பைக் கூறுவது.* விலை அணா 2

**கட்டுரை விளக்கம்.** *மாணவர்களுக்கு உரிய கட்டுரைகள் அடங்கியது. எளிய நடையில் அமைந்தது.* விலை அணா 3

**ஔவையார் தனிப்பாட்டு ஆராய்ச்சி.** *உலகம் போற்றும் ஔவையார் பாடல்களைப்பற்றிய ஓர் ஆராய்ச்சி நூல். இனிய உயரிய நடையில் அமைந்தது.* விலை அணா 6

**இலக்கியக் கட்டுரை.** *இயற்கைப் பொருள்களை உரைச் செய்யுள் வடிவில் விளக்கும் உரைநடை நூல்.* விலை அணா 6

**தனிப்பா அலங்கல்.** *பொழுது போக்குக்கு உரிய பல திறப்பட்ட இனிய பாடல்களை உடையது.* விலை அணா 4

**நெறி இயல்.** *மாணவர்க்குரிய ஒழுக்கங்களை வெண்பாக்களில் விளக்கும் நீதி நூல்.* விலை அணா 4

**அணி நாற்பது.** ,, ,, விலை அணா 4

*இவற்றை முன்பணம் அனுப்பியாயினும், தபால் தலைகள் அனுப்பியாயினும் எம்மிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு ரூபாய்க்குக் குறையாது அனுப்புவோருக்கு தபால்கூலி இலவசம்.*

**செந்தமிழ் நிலையம் பதிப்பகம்,**
பதுமநாபபுரம், தக்கலை P. O. தென் திருவிதாங்கூர்.

---

நாகர்கோவில், தாஸர் அச்சாபீஸில் பதிப்பிக்கப்பெற்றது—1946.